| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திருமதி. மணிமேகலை<br>க.பெ. திரு. அயினான் | அ.வ.எண்.212/2019 | 07.11.2025 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) வாதிகள் எனக்கு ஒன்றுவிட்ட பங்காளிகள் உறவுமுறை என்றால் சரிதான். கலைமணி என்பவர் யார் என்றால் எனது சின்ன மாமியாரின் மகள். எனக்கு நத்தத்திலும், வாதிகளுக்கு புஞ்சையிலும் இடம் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும் மேல்புறம் வாதிகளின் இடம் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய மேல்புற இடத்தில் நான் சுவர் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

2) மேற்படி மேல்புற சுவற்றில் வாசற்படி சுவர் எதுவும் இல்லை என்றால் சரிதான், வாசற்படி இல்லை, ஆனால் இடம் உள்ளது. மேற்படி மேல்புற சுவற்றிற்கு அடுத்துள்ள இடத்திற்கு நான் வேலி அடைப்பு செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மேல்புற சுவற்றிற்கு மேல்புறம் உள்ள இடமும், புஞ்சை இடமும் சமமாக இருக்கும் என்றால் சரிதான். மேற்புற சுவர் அரளை கல் வைத்து அதன் மேல் செங்கல் கல் வைத்து எழுப்பப்பட்ட சுவர் என்றால் சரிதான்.

3) மேற்படி சுவற்றின் மேல் எனது வீடு எழுப்பப்படவில்லை என்றாலும், தனியாக சுவர் மட்டுமே உள்ளது என்றாலும் சரியல்ல, அதில் நாங்கள் ஓடு போட்டுள்ளோம். எங்களது நத்தம் இடத்திற்கும், வாதிகளின் புஞ்சை இடத்திற்கும் வடபுறத்தில் ஊராட்சி பாதை உள்ளது என்றால் மேற்படி பாதை கிழக்கில் இருந்து வந்து எங்களது நத்தம் இடத்தோடு முடிகிறது.

4) மேற்படி பாதை முடியும் இடமானது எனது மேற்புற சுவற்றிற்கு எவ்வளவு அடி தள்ளி பாதை உள்ளது என்றால் நத்தத்துடன் சுமார் ஒரு 1/2 அடியில் இருந்து 3/4 அடி கீழ்புறத்திலேயே முடிந்து விடுகிறது. எங்களது மேல்புற சுவற்றிற்கு மேல்புற இடத்திற்கு வடபுறத்தில் கேட் அமைத்துள்ளேனா என்றால் இல்லை, அது சுவற்றுடன் முடிகிறது. எங்களது மேல்புற சுவற்றிற்கு மேல்புற இடத்தின் கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு என்றால் கிழமேல் சுமார் 4 – 4–1/2 அடி இருக்கும், தென்வடல் சுமார் 40 அடிக்கு மேல் இருக்கும்.

5) மேற்படி 4x40 அடி அளவுள்ள இடம் எத்தனை நாட்களாக காலியாக உள்ளது என்றால் வெகுநாட்களாகவே காலியாக தான் உள்ளது. மேற்படி 4x40 அடி அளவுள்ள இடத்திற்கும் மேற்கில் தான் வாதிகள் வீடு கட்டி, அதன் வாசற்படியை கிழக்கு நோக்கி வைத்துள்ளனர் என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் 4x40 அடி அளவுள்ள இடத்தை பொறுத்து எவ்வளவு நாட்களாக பிரச்சனை உள்ளது என்றால் 10 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது.

6) மேற்படி காலி இடத்தை வாதிகள் எவ்வளவு நாட்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் 6–7 வருடங்களாக வாதிகள் வீடு கட்டிய பிறகு பிரச்சனை செய்து வருகின்றனர். மேற்படி காலி இடத்திற்கும் வடபுறத்தில் உள்ள நத்தம் பாதையுடன் மேற்படி காலியிடமும் சேர்கிறது என்றால் சரிதான். வாதிகள் அவர்களது வீட்டிற்கு கீழ்புறத்தில் அமைத்துள்ள வாசற்படி வழியாக மேற்படி காலியிடத்திற்கு வந்து கிழமேல் பாதைக்கு வந்து செல்கின்றனர் என்றால் சரிதான், அதை பொறுத்து தான் பிரச்சனை.

7) எனது நத்தம் இடத்தை சர்வேயரை வைத்து அளந்தேனா என்றால் நாங்கள் அளக்க முயற்சித்த போது வாதிகள் அளக்கவிடவில்லை. பொதுவாக ஒரு இடத்தை அளக்க வேண்டுமென்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்க வேண்டும் என்றாலும், நான் அவ்வாறு மனு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றாலும் மனு கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல் அளக்க மனு கொடுத்திருந்தால் அவ்வாறு மனு கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு மனு கொடுக்காததால் தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

8) எங்களது மேல்புறத்தில் உள்ள தென்வடல் சுவற்றுடன் எனது இடம் முடிந்து விடுகிறது என்றாலும், அதற்கு மேற்கே உள்ள காலியிடம் எங்களது பங்காளிகளால் முன்னதாகவே விடப்பட்ட இடம் என்றாலும், ஆனால் மேற்படி இடம் நத்தத்தில் வருவதால் மேற்படி இடம் எங்களுடையது என்று பொய்யாக கட்சி செய்து வருகின்றோம் என்றால் சரியல்ல.

9) மேற்படி 40x4–1/2 அடி உண்மையிலேயே எங்களது நத்தம் இடமாக இருந்திருந்தால் அதனை வேலி அடைப்பு செய்து வைத்திருப்போம் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால், எனது பங்காளிகளால் காலியாக விடப்பட்டுள்ள இடம் என்றாலும் சரியல்ல. நான் அளக்க மனு செய்த போது வாதிகள் தடுத்ததாக கூறியுள்ளேன், அதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 2 முறை கொடுத்தேன்.

10) மேற்படி புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதிகள் தான் எங்களை அடித்துவிட்டு, எங்கள்

மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். எங்களது இடம் எங்களது மேல்புற சுவருடன் முடிகிறது என்பது எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதற்கு மேல்புறம் உள்ள இடம் வாதிகளுக்கு பாதைக்காக விடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

11) எனக்கு சொந்த ஊர் வலையூர் என்றால் சரிதான். நத்தத்தில் உள்ள எனது வீட்டிற்கு நான் திருமணமாகி வந்தேன் என்றால் சரிதான். எனது கணவரின் பங்காளிகள், மூதாதையர்களுக்கிடையே பாதை தொடர்பாக ஏற்பட்ட பேச்சுவார்த்தை விபரங்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)